ISSN 2454-3993

JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SIJ TAMIL STUDIES

மலர் 3 • சிறப்பிதழ் 2 • ஏப்ரல், 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

நான்காம் தமிழ்ச் சங்கம், மதுரை

செந்தமிழ்க் கல்லூரி, தமிழ் உயராய்வு மையம்

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## தமிழிலக்கியப் படைப்புகளில் பெண் பதிவுகளும் படைப்பாளுமைகளும்

தொகுதி - IV



தமிழ் உயராய்வு மையம்

செந்தமிழ்க் கல்லூரி

மதுரை

**UGC Approved Journal Number: 40729**

**VOLUME 3 | SPECIAL ISSUE 2 | APRIL 2019**

**Shanlax International Journal of Tamil Studies**

**(A Peer-reviewed- Scholarly Indexed Quarterly Journal**

SHANLAX INTERNATIONAL JOURNALS

editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

| | | |
|---|---|---|
| 18 | தோப்பில் மீரான் நாவல்களில் பெண்கள் குறித்த சித்திரிப்புகள்<br>**முனைவர். இர. பிரபா** | 72 |
| 19 | தமிழிலக்கியங்களில் காலந்தோறும் பெண் பதிவுகள்<br>**ச.மணிகண்டன்** | 77 |
| 20 | புறநானூற்று மகளிர்<br>**முனைவர் பி.மலர்விழி** | 80 |
| 21 | அகநானூற்றில் பெண் கூற்றின் வாயிலாக பெண்களின் தனித்தன்மை அறிதல்<br>**செ. முத்துச்செல்வி** | 85 |
| 22 | புனிதவதியாரும் புதிய பண்பாட்டுக் கருத்துருவும்<br>**முனைவர் ஆர். முத்துராஜன்** | 89 |
| 23 | புறநானூற்று மகளிர்<br>**முனைவர் கரு.முருகேசனார்** | 94 |
| 24 | நீதி நூல்களில் வெளிப்படும் பெண்ணடிமைச் சிந்தனைகள்<br>**முனைவர் செள.மைதிலி** | 98 |
| 25 | சங்க இலக்கியங்களில் பெண்களின் மன உறுதியும் அதற்கான பின்புலங்களும்<br>**முனைவர் ந. இராசேந்திரன்** | 102 |
| 26 | அறியவேண்டிய பெண் கதைசொல்லி<br>**முனைவர் நா. ரேணுகா** | 107 |
| 27 | மீட்டுருவாக்கப் பெண் பதிவுகள்<br>**முனைவர் க. லதா** | 111 |
| 28 | நா.முத்துக்குமாரின் படைப்புகளில் பெண் ஆளுமை<br>**சோ.ஹரிபாண்டிராஜன்** | 115 |
| 29 | விஷ்ணுபுரம் நாவல் சித்திரிக்கும் பெண்ணுலகம்<br>**முனைவர் தி.ஹேமலதா** | 119 |
| 30 | சிறு தெய்வ வழிபாட்டில் பெண் பதிவுகள்<br>**அ. ஜீவா** | 125 |
| 31 | தமிழ்ப் பண்பாட்டில் மகளிர் நிலை<br>**முனைவர் இரா. ஜீவா** | 129 |
| 32 | சங்க அகப் பாடல்களில் பெண்பாற் புலவர்கள் தரும் மகளிர் பற்றிய குறிப்புகள்<br>**எஸ். ஐ. ஜெயந்தி** | 132 |
| 33 | சிலப்பதிகாரத்தில் மாதவி<br>**முனைவர் பெ. ஜெயமாரி** | 136 |
| 34 | புறநானூறு பாடிய பெண்புலவர்கள்<br>**ச.ஜெயா** | 140 |
| 35 | மண்புழுக்கள்<br>**சிந்தியா ஜார்ஜ்** | 145 |
| 36 | The Role of Career Women : Marriage, Sex and Trauma in the Novels of Shashi Deshpande<br>**Dr K.Venuka** | 147 |

# மீட்டுருவாக்கப் பெண் பதிவுகள்

முனைவர் க. லதா
இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி, மதுரை

மலர்: 3
சிறப்பிதழ்: 7
தொகுதி: IV
மாதம்: ஏப்ரல்
வருடம்: 2019
ISSN: 2454-3993

காலந்தோறும் மக்கள் வாழ்வியலைப் பதிவு செய்யும் இலக்கியங்கள் அவ்வக்காலத்தின் ஆவணங்கள். அவற்றில் மீட்டுருவாக்கம் எனும் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சும்போது அவை புதுச்சிந்தனைகளை தோற்றுவிக்கின்றன. மீட்டுருவாக்கம் 'Reconstruction' என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. சமூகப் போக்குகளைப் புதுப்பார்வையால் நோக்கும் போது வெளிச்சத்திற்கு வராத, அறியாத கருத்துக்களை வாசகனால் உணரமுடியும். மாற்றுச் சிந்தனைகளை உணரவும் உணர்த்தவும் முடியும். அவ்வகையில் சமூகம் கட்டமைத்த கட்டத்துக்குள் இருந்த பெண் கதை மாந்தரை மாற்றுச் சிந்தனையுடன் மறுஉருவாக்கம் செய்துவரும் பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், படைப்பாளர் எனும் பன்முகத்திறன் கொண்ட எம்.ஏ. சுசீலாவின் 'தேவந்தி' தொகுப்பில் இடம்பெறும் சிறுகதைகளில் காணப்படும் பெண் குறித்த பதிவுகளை எடுத்துச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

'மீட்டுருவாக்கங்கள்' ஒரு வகை சாதிக்காகப் படைத்துக் கொள்ளப்பட்டவை. ஒரு இனத்தைச் சேர்ந்த மொழிகளில் கிட்டத்தட்ட ஒரு பொருண்மையைத் தரும் சொற்கள் வடிவத்தில் சிறிது வேறுபட்டு அமைந்திருக்குமானால் அவ்வேறுபாட்டினூடே ஓர் ஒற்றுமையைக் காண அந்த ஒற்றுமை எந்தெந்த மொழிகளில் எந்தெந்தச் சூழலில் எவ்வெவ்வாறு திரிந்தது என்று எடுத்து விளக்கும் குறியீடே மீட்டுருவாக்கம்' என்று வாழ்வியல் களஞ்சியம் வரையறுக்கிறது. ஆனால் 'கட்டவிழ்ப்பு என்பது கொள்கை அல்லது சித்தாந்தம் என்பதன் கட்டுமானத்தை மறுக்கிறது அல்லது சிதைக்கிறது' என்று கூறுகிறார் தி.சு. நடராசன். இன்று பெரும்பாலும் முன்சுட்டப்பட்டவற்றுள் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட வரையறையே பொருத்தமாக இருக்கிறது.

தேவந்தி, சீதை, ஆண்டாள் என்ற மூன்று பெண்கள் சிலப்பதிகாரத்திலும், இராமாயணத்திலும் ஆழ்வார் பாடல்களிலும் இடம்பெற்ற இம்மூவரும் எம்.ஏ. சுசீலா அவர்களின் பார்வையில் மாற்றுருக் கொள்கிறார்கள். கண்ணகியின் உயிர்த்தோழி தேவந்தி, பாசண்டச் சாத்தன் என்ற தெய்வத்தின் மனைவியாகச் சிலப்பதிகாரத்தில் படைக்கப்பட்டவள். ஆனால் எம்.ஏ. சுசீலாவின் கைவண்ணத்தில் 2007 ஆம் ஆண்டு வடக்கு வாசல் இதழில் 'தேவந்தி' என்ற பெயரில்